செ.வெ.எண்: 320/2016 நாள்: 01.06.2016

# செய்தி குறிப்பு

## முன்னாள் படை வீரர்களுக்கான நிதியுதவிகள் பெற ஆன்லைன் மூலமாக பதிவு செய்திட அழைப்பு

முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் சிறார்களுக்கு புதுடெல்லி மத்திய முப்படை வீரர் வாரியத்தால் அளிக்கப்பட்டு வந்த அனைத்து நிதியுதவிகள் மற்றும் சலுகைகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இவ்வாண்டு ஜூன் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து அதற்காக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ள இணையதளம் மூலமாக மட்டுமே பரிசீலிக்கப்படும் என மத்திய முப்படை வீரர் வாரியத்தின் (Kendriya Sainik Board) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில் கல்வி பயிலும் சிறார்களுக்கான பாரத பிரதமரின் கல்வி நிதியுதவி (PMSS), ஒன்றாம் வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கான (RMDF) ஆகிய கல்வி நிதியுதவிகளும் இதில் அடங்கும்.

விண்ணப்பங்கள் www.ksb.gov.in என்ற இணையதளத்தில் உரிய தலைப்புகளின் கீழ் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. முன்னாள் படை வீரர்கள் மற்றும் விதவைகள் முதற்கட்டமாக மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் தங்களது பெயர் (Registration)பதிவு மேற்கொண்டு அதற்கான password மின்னஞ்சல் மூலமாக பெறப்பட்டதும் விண்ணப்பிக்க விரும்பும் நிதியுதவி அல்லது சலுகை வேண்டி பதிவு மேற்கொள்ள இயலும்.

மேற்குறிப்பிட்ட இணையதளத்தினை பயன்படுத்துவது குறித்து விளக்கம் மற்றும் முன்னோடி பயிற்சி வகுப்பு ஒன்று 08.06.2016 அன்று மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகத்தில் வைத்து நடத்தப்படவுள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் முன்னாள் படை வீரர்கள் 08.06.2016 அன்று காலை 9.00 மணிக்கு வருகை தரும்படி மாவட்ட முன்னாள் படை வீரர் நல துணை இயக்குநர் மேஜர் வா.ஸ்ரீ.ஜெயகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.